இந்தியா மீது 100 சதவீத வரி... முதல் பக்க தொடர்ச்சி

பிரதிநிதிகள் சபையில் இந்த மசோதா மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் மசோதாவுக்கு ஆதரவாக ஆளும் குடியரசு கட்சியினர் வாக்களித்த நிலையில், எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியைச் சேர்ந்த 2 எம்பிக்களும் கட்சி நிலைப்பாட்டை மீறி ஆதரவாக வாக்களித்தனர். இதையடுத்து, பெரும்பான்மை பலத்துடன் மசோதா இறுதிகட்ட ஓட்டெடுப்புக்கு முன்னேறியது. இறுதி ஓட்டெடுப்பில் 262-159 என்ற வாக்கு வித்தியாசத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிபர் டிரம்பின் கையெழுத்திற்காக மசோதா அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மசோதா நிறைவேறியதன் மூலம், இந்தியா, சீனா, துருக்கி, அஜர்பைஜான், ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு, 100 சதவீத வரி விதிக்கப்படும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட உடனே இந்தியா மீது 100% வரி விதிக்கப்படாது. மாறாக, அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு இந்தியா போன்ற நாடுகளின் இறக்குமதி பொருட்கள் மீது 100% வரை வரி விதிப்பதற்கான சட்டப்பூர்வ அதிகாரத்தை மட்டுமே இந்த மசோதா வழங்குகிறது. ஆனாலும், இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராக எந்த விவகாரத்திலும் பேரம் பேசவும், பணிய வைக்கவும் அதிபர் டிரம்ப் இந்த மசோதாவை பயன்படுத்த வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

ரஷ்ய எண்ணெயால் இந்தியா பெறும் லாபம்

ரஷ்யாவிடமிருந்து இந்தியா ஓராண்டுக்கு சுமார் 40 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ3.3 லட்சம் கோடி) மதிப்புள்ள கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. உக்ரைன் போர் மற்றும் சர்வதேச அரசியல் பதற்றங்களுக்கு மத்தியிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு 50% வரை அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தை விலையை விட ரஷ்யா குறைவான விலைக்கு கச்சா எண்ணெயை வழங்குவதால், இந்தியாவுக்கு ஆண்டுக்கு சுமார் 2.5 பில்லியன் டாலர் முதல் 3 பில்லியன் டாலர் வரை (சுமார் ரூ21,000 - ரூ25,000 கோடி) நேரடி பணச் சேமிப்பு கிடைக்கிறது. 2022ல் போர் தொடங்கியதில் இருந்து தற்போது வரை சலுகை விலை கச்சா எண்ணெய் இறக்குமதி மூலம் இந்தியா ஒட்டுமொத்தமாக ரூ1.05 லட்சம் கோடி முதல் ரூ1.4 லட்சம் கோடி வரை மிச்சப்படுத்தியுள்ளதாகப் பல்வேறு பொருளாதார ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு என்ன பாதிப்பு?

அமெரிக்காதான் இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகும். 100% வரை வரி விதிக்கப்பட்டால், அமெரிக்க சந்தையில் இந்திய பொருட்களின் விலை இருமடங்காக உயர்ந்து, தன் போட்டி தன்மையை முற்றிலும் இழந்துவிடும். இதனால் பின்வரும் தொழில்துறைகள் கடுமையாக பாதிக்கப்படும் ஏற்கனவே அமெரிக்க வரிகளால் சரிவை கண்டுள்ள இத்துறை, மேலும் பல லட்சம் வேலைவாய்ப்புகளை இழக்கும் அபாயத்திற்கு உள்ளாகும். வைரம் தீட்டுதல் மற்றும் தங்க நகை ஏற்றுமதி தொழில் கடுமையாக முடங்கும். பொறியியல் பொருட்கள், ரசாயனங்கள், மற்றும் கடல்சார் உணவு (இறால் வளர்ப்பு) ஏற்றுமதியாளர்கள் மிகப்பெரிய நஷ்டத்தை சந்திக்க நேரிடும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) சுமார் 1% வரை பாதிக்கப்படலாம். அமெரிக்காவிற்கான ஏற்றுமதி குறையும் போது, இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை கணிசமாக அதிகரிக்கும். உக்ரைன் போருக்கு பிறகு, இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 40% முதல் 50% வரை ரஷ்யாவிடம் இருந்தே தள்ளுபடி விலையில் இறக்குமதி செய்கிறது. நிதியாண்டில் மட்டும் இந்தியா சுமார் 40.8 பில்லியன் டாலர் மதிப்பிலான ரஷ்ய எண்ணெயை வாங்கியுள்ளது. அமெரிக்காவின் வரி அச்சுறுத்தலுக்கு பயந்து இந்தியா, ரஷ்ய எண்ணெயை குறைத்தால், சர்வதேச சந்தையில் அதிக விலை கொடுத்து எண்ணெய் வாங்க வேண்டியிருக்கும். இது இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்வு மற்றும் கடுமையான பணவீக்கத்திற்கு வழிவகுக்கும்.

பாஜ அரசு மீது காங். சாடல்

ரஷ்யா மற்றும் ஈரான் மீதான லிண்ட்சே கிரஹாம் தடைகள் விதிக்கும் 2026 ம் ஆண்டு மசோதாவை அமெரிக்க பிரதிநிதி சபை அங்கீகரிகரித்துள்ளது. மசோதா நிறைவேற்றப்பட்டது குறித்து, காங்கிரஸ் கட்சி எம்பி ஜெய்ராம் ரமேஷ், எக்ஸ் தளத்தில் பதிவிடுகையில் "சமாதானப்படுத்தும் முயற்சி ஒருபோதும் பலனளித்ததில்லை, இனியும் பலனளிக்காது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெலன்ஸ்கி வரவேற்பு

ரஷ்யா மீதான தடைகள் நிறைவேற்றப்பட்டதை உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி வரவேற்றுள்ளார். ரஷ்யாவிற்கு நிதி செல்லும் பாதையை முடக்க சர்வதேச அழுத்தம் அவசியம் என ஜெலென்ஸ்கி வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பணியாளர் தேர்வு ஆணையம் (தெற்கு மண்டலம்), சென்னை

குறுகிய அறிவிப்பு

பாடம்: ஒருங்கிணைந்த மேல்நிலை (10+2) தேர்வு, 2026

பணியாளர் தேர்வு ஆணையம் (SSC), இந்திய அரசின் கீழ் உள்ள பல்வேறு துறைகள்/ அமைச்சகங்கள்/ நிறுவனங்களில் உள்ள பல்வேறு குரூப் C பதவிகளுக்கு, கணினி வழித் தேர்வு (CBE) முறையில் ஒரு திறந்த போட்டித் தேர்வு மூலம் ஆட்சேர்ப்பு நடத்துகிறது. வயது வரம்பு, கல்வித் தகுதிகள், விண்ணப்பிக்கும் முறை போன்றவை தொடர்பான விரிவான அறிவுறுத்தல்கள், 07.09.2026 தேதியிட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை https://ssc.gov.in என்ற இணையதளத்தில் அணுகலாம். இணையதளம் மூலம் ஆன்லைன் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி தேதி 07.10.2026 (23:00 மணி வரை) ஆகும்.

மண்டல இயக்குநர்
எஸ்எஸ்சி (எஸ்ஆர்), சென்னை

CBC 32203/11/0011/2627

தெற்கு இரயில்வே

1. மின்னணு ஏல பட்டியல் எண்.TPJ-PnU-2026-14 தேதி 02.09.2026

1. மன்னார்குடி இரயில் நிலையத்தில் நடைமேடை எண்.1ல் உள்ள சாதாரண கட்டண கழிப்பறைகளை இயக்கி பராமரித்தல்
2. திருச்சிராப்பள்ளி சந்திப்பு இரயில் நிலையத்தில் நடைமேடை எண். 8ல் அமைந்துள்ள சாதாரண கட்டண கழிப்பறைகள் தொகுதியை இயக்கி பராமரித்தல்
3. பாபநாசம் இரயில் நிலையத்தில் நடைமேடை எண்.1ல் உள்ள சாதாரண கட்டண கழிப்பறைகளை இயக்கி பராமரித்தல்
4. அரியலூர் இரயில் நிலையத்தில் நடைமேடை எண்.1ல் நிலைய கண்காணிப்பாளர் அலுவலகம் அருகில் உள்ள சாதாரண கட்டண கழிப்பறைகளை இயக்கி பராமரித்தல்

(மின்னணு ஏலம் நடத்தப்படும் தேதியும் நேரமும்
21.09.2026 அன்று 11:00 மணி – 12:00 மணி இடையே)

2. மின்னணு ஏல பட்டியல் எண். TPJ-MSS-BCA-262 தேதி 02.09.2026

1 பயனரிடம் கட்டணம் வாங்குவதன் அடிப்படையில், விருதாசலம் சந்திப்பு இரயில் நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட பேட்டரியில் இயங்கும் கார் சேவைகள் 5 ஆண்டுகள் காலத்திற்கு அளித்தல் – இதில் உத்தேசிக்கப்பட்ட பேட்டரி காரின் ஃப்ளாங்குகளில் விளம்பர உரிமைகளும் அடங்கும். ஃப்ளாங்குகளின் பகுதியில் 75% பகுதியை மீறாமல் இருத்தல் வேண்டும்.

2 பயனரிடம் கட்டணம் வாங்குவதன் அடிப்படையில் அரியலூர் இரயில் நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட பேட்டரியில் இயங்கும் கார் சேவைகள் 5 ஆண்டுகள் காலத்திற்கு அளித்தல் – இதில் உத்தேசிக்கப்பட்ட பேட்டரி காரின் ஃப்ளாங்குகளில் விளம்பர உரிமைகளும் அடங்கும். ஃப்ளாங்குகளின் பகுதியில் 75% பகுதியை மீறாமல் இருத்தல் வேண்டும்

(மின்னணு ஏலம் நடத்தப்படும் தேதியும் நேரமும்
21.09.2026 அன்று 11:00 மணி – 11:40 மணி இடையே)

மின்னணு ஏலம் பற்றிய விவரங்களுக்கு காண்க
இணையதளம் **www.ireps.gov.in**

தெற்கு இரயில்வே

துணை தலைமை மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம்,
கேரேஜ் ஒர்க்ஸ் /எலக்ட்ரிக்கல், பெரம்பூர், சென்னை – 600 023
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.E-E-29-I-2026-02-QTRS-RT தேதி 16.09.2026

"பணிகள் ஒப்பந்தப்புள்ளிகளுக்காக "விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பப்புள்ளியாளர்கள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் **http://www.ireps.gov.in**–ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகையை IREPS வலைதளத்தில் உள்ள நெட் பேங்கிங், டெபிட் கார்டு /கிரெடிட் கார்டு ஆகிய ஆன்லைன் பேமெண்ட் வழிமுறையில் மட்டுமே செலுத்த வேண்டும். மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க ஏதுவாக டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ்களை பெற வேண்டியது ஒப்பந்தப் புள்ளியாளர்கள் பொறுப்பு ஆகும். முழுமையான விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளி ஆவணத்தையும் **http://www.ireps.gov.in** இணையதளத்தில் காணலாம். பிற விவரங்கள், கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய, ஒப்பந்தப் புள்ளியாளர்கள், பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து சேர்த்தல் / திருத்தம், கால நீட்டிப்பு, ஐயப்பாடு தீர்த்தல் ஆகியவை இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். தனியாக நாளிதழ்களில் வெளியிடப்பட்ட மாட்டாது. ஒப்பப்புள்ளியாளர்கள் அவ்வப்போது இணையதளத்தை பார்த்து அண்மை நிலவரங்களை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தருணத்தில் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் அலுவலகத்துக்கு வருகை தர வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் IREPS இணையதளத்தில் ஆன்லைனில் ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் நிலவரத்தை காணலாம்.

வ.எண். 1	**ஒப்பந்தப்புள்ளி எண். E-E-29-I-2026-02-QRTS-RT தேதி : 16.09.2026**
பணி பற்றிய விவரம்	OW/PER – பெரம்பூர் பகுதியில் டைப் – II ஊழியர்கள் குடியிருப்புக்கு மறு ஒயரிங் பணி
ஒப்பந்தப்புள்ளியின் தோராய மதிப்பு	₹1,65,20,918.00
மின்னணு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப் படுவதற்கான கடைசி தேதியும் நேரமும்	14.10.2026 அன்று 15.00 மணி
பணியை முடிப்பதற்கான காலம்	150 நாட்கள்

உதவி செயற் பொறியாளர் / P /பெரம்பூர்
துணை தலைமை மின்சார பொறியாளர்,
கேரேஜ் ஒர்க்ஸ், பெரம்பூர் அவர்களுக்காக

தெற்கு இரயில்வே

துணை தலைமை மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம்,
கேரேஜ் ஒர்க்ஸ் /எலக்ட்ரிக்கல், பெரம்பூர், சென்னை – 600 023
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.E-E-29-I-2024-03-RT2 தேதி 12.09.2026

"பணிகள் ஒப்பந்தப்புள்ளிகளுக்காக "விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பப்புள்ளியாளர்கள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் **http://www.ireps.gov.in**–ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகையை IREPS வலைதளத்தில் உள்ள நெட் பேங்கிங், டெபிட் கார்டு /கிரெடிட் கார்டு ஆகிய ஆன்லைன் பேமெண்ட் வழிமுறையில் மட்டுமே செலுத்த வேண்டும். மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க ஏதுவாக டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ்களை பெற வேண்டியது ஒப்பந்தப் புள்ளியாளர்கள் பொறுப்பு ஆகும். முழுமையான விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளி ஆவணத்தையும் **http://www.ireps.gov.in** இணையதளத்தில் காணலாம். பிற விவரங்கள், கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய, ஒப்பந்தப் புள்ளியாளர்கள், பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து சேர்த்தல் / திருத்தம், கால நீட்டிப்பு, ஐயப்பாடு தீர்த்தல் ஆகியவை இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். தனியாக நாளிதழ்களில் வெளியிடப்பட்ட மாட்டாது. ஒப்பப்புள்ளியாளர்கள் அவ்வப்போது இணையதளத்தை பார்த்து அண்மை நிலவரங்களை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தருணத்தில் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் அலுவலகத்துக்கு வருகை தர வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் IREPS இணையதளத்தில் ஆன்லைனில் ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் நிலவரத்தை காணலாம்.

வ.எண். 1	**ஒப்பந்தப்புள்ளி எண். E-E-29-I-2024-03-RT2 தேதி : 12.09.2026**
பணி பற்றிய விவரம்	பெரம்பூரில் துணை தலைமை மின்சார பொறியாளர் / கேரேஜ் ஒர்க்ஸ் / பெரம்பூர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டில் எலக்ட்ரிக்கல் சொத்துடைமைகளுக்கான (IR NIYANTRAC) IOT அடிப்படையிலான ஆன்லைன் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு என்பதை ஏற்படுத்தி தருதல்
ஒப்பந்தப்புள்ளியின் தோராய மதிப்பு	₹49,99,907
மின்னணு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப் படுவதற்கான கடைசி தேதியும் நேரமும்	06.10.2026 அன்று 15.00 மணி
பணியை முடிப்பதற்கான காலம்	90 நாட்கள்

உதவி செயற் பொறியாளர் / P / பெரம்பூர்
துணை தலைமை மின்சார பொறியாளர்,
கேரேஜ் ஒர்க்ஸ், பெரம்பூர் அவர்களுக்காக

ஊழல் நிறைந்தது, திறமையற்றது

இந்தியாவிலேயே மபி அரசு மோசம்

ராகுல் கடும் விமர்சனம்

புதுடெல்லி, செப்.18: மத்தியபிரதேசத்தில் முதல்வர் மோகன் யாதவ் தலைமையிலான பாஜ ஆட்சி செய்து வருகிறது. இங்குள்ள பாலாகாட் நகரில் கடந்த சில தினங்களுக்கு முன், 30க்கும் மேற்பட்ட பழங்குடியின குழந்தைகள் உடல்நல குறைவால் உயிரிழந்தனர்.

இதுகுறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, எக்ஸ் பதிவில், "பாலாகாட்டில் நோய், ஊட்டச்சத்து குறைபாடு, அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாதது ஆகியவற்றால் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். அப்பாவி உயிர்கள் பறிபோய்கொண்டிருந்த நிலையிலும், அரசின் நடவடிக்கை மந்தமாகவும், அலட்சியமாகவும் இருந்தது. அரசு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.

ம.பி. முதல்வர் அவர்களே, விளக்கேற்றுவதிலும், கொண்டாட்டங்களிலும் நேரம் செலவிட்ட பிறகு, மாநிலத்தின் கள நிலவரத்தையும் ஒரு முறை பாருங்கள். நோய் கட்டுப்பாடு, ஊட்டச்சத்து, அசுத்தமான குடிநீர் மற்றும் சீர்குலைந்துள்ள சுகாதார அமைப்பு ஆகியவை குழந்தைகளின் உயிரை பறித்து வருகிறது.

மத்தியபிரதேசத்தில் குழந்தைகள், மாணவர்கள், ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் என அனைவருமே துன்புறுத்தப்படுகிறார்கள். யாரும் மகிழ்ச்சியாக இல்லை. மத்தியபிரதேச மாநில பாஜ அரசுதான் இந்தியாவின் மிகவும் ஊழல் நிறைந்த, திறமையற்ற அரசாங்கம். இதுதான் உண்மை" என காட்டமாக விமர்சித்துள்ளார்.

மெக்காவுக்கு அச்சுறுத்தல் வந்தால் சகித்துக் கொள்ள மாட்டோம்

பாகிஸ்தான் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், செப் 18: புனித நகரமான மெக்காவை குறிவைத்து கடந்த செப்.15 அன்று ஏமனின் ஹவுதி அமைப்பினர் நடத்திய டிரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக சவுதி அரேபியா தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த செயலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்த நிலையில், இந்த குற்றச்சாட்டை ஹவுதி அமைப்பு முற்றிலுமாக மறுத்தது. இந்நிலையில், 'மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி' சவுதிக்கு முழு பாதுகாப்பு அளிக்க பாகிஸ்தான் தயாராக உள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார். கடந்த ஆகஸ்ட் 7ம் தேதி பாகிஸ்தான், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இணைந்து 'மெக்கா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி, மூன்று நாடுகளில் ஏதேனும் ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அது 3 நாடுகளின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும்.

இது குறித்துப் பேசிய பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப், "புனித நகரமான மெக்காவை பாதுகாக்க எந்த ஒப்பந்தமும் தேவையில்லை; அது எங்களது கடமை. இருப்பினும், இந்த ஒப்பந்தத்தின்படி மூன்று நாடுகளின் எல்லைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் கூட்டுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. பாகிஸ்தான் எப்போதுமே சவுதி அரேபியாவுக்குத் தோளோடு தோள் நின்று ஆதரவு அளிக்கும்" என்றார்.

தெற்கு இரயில்வே

1) பணி பற்றிய விவரம்: பின்வருவன்றுக்காக மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள். அதாவது

(அ) ADEN/JTJ துணை கோட்டத்தில் 9 நெ இரயில் நிலையங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வசதிகளை அமைத்தல் – AB, VN, GYM (NSG 5), KDY, VGM, PCKM, MPI & VLT (NSG 6), MEH (HG 3) **(ஆ)** AJJ – CGL பிரிவில் 10 நெ இரயில் நிலையங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வசதிகளை அமைத்தல் CJ (NSG 4), TMLP, WJ, PALR (NSG 6), TKO, NTT, PYV, VB, RDY (HG3), CJE (Hg1) **(இ)** ADEN / KPD துணை கோட்டத்தில் 11 இரயில் நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வசதிகளை அமைத்தல் (WJR, SHU, KVN, LTI, SVUR, THL, TUG, CTRE, MCN, AVN & VJ)

2) மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.MAS/EGS/ET/26/2026–2027 தேதி 16.09.2026

3) மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண். ME-29-II-1098R-2026

4) பணியின் மதிப்பு ரூ.35,97,832/–
(ரூபாய் முப்பந்தைந்து இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று முப்பத்து இரண்டு மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்களுக்கு காண்க – இணையதளம் **www.ireps.gov.in**

முதுநிலை கோட்ட மின்சார
பொறியாளர் / பொது / MAS

பிற்சேர்க்கை IV–ஏ
அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002-ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ-ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002-ன் விதி 8(6) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட/ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **சம்மான் கேபிடல் லிமிடெட் (முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிட் என்று அழைக்கப்பட்டது)–ன் [CIN : L65922DL2005PLC136029] (''செக்யூர்ட் கிரெடிட்டர்'')** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **ஆக்கபூர்வமா கையகப்படுத்தியுள்ளார்** என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **கே குருபிரகாஷ், கார்த்திஹா என்ற ஜி கார்த்திஹா மற்றும் பி ஜனகன் (ஜாமீன்தாரர்)** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **09.09.2026**-லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **08.09.2026** தேதிவரை கடன்கணக்கு எண். **HHLVLC00376518**-ன் மீதாக **ரூ. 26,75,859/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து எழுபத்தைந்து ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **22.10.2026**-ம் தேதி **மாலை 05.00 முதல் மாலை 06.00 வரை ''எங்கிருக்கிறதோ அங்கு'', ''உள்ளது உள்ளபடி'' மற்றும் ''எதுவாக இருந்தாலும்''** விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 26,00,000/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (''ஈஎம்டி'') ஏல மதிப்பில் 10%-க்குச் சமமான அதாவது **ரூ. 2,60,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)** ஆகும்.

அசையா சொத்தின் விவரம்:

ஒரு குடியிருப்பு பிளாட் எண். ஜி-4, தரை தளத்தில், 'நெஸ்ட்' என பெயரிடப்பட்ட அபார்ட்மெண்ட், 560 சதுர அடி பரப்பளவில் பொதுவான பகுதி உட்பட 281 சதுர அடி பில்ட்-அப் பகுதி, 2568 சதுர அடி நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு உடன் மற்றும் பிளாட் எண். 91ஏ-வில் அடங்கியது, சரவணா நகரில் 4000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது, ஓஎஸ் எண். 565/1ஏ1, எஸ்எஃப் எண். 97/3, வார்டு எண். - டி, பிளாக் 87, டிஎஸ்எல்ஆர் எண். 8ஏ/1186/1416 கொண்ட புல எண்களில் அடங்கியது, திருமுல்லைவாயல் கிராமத்தில் அமைந்துள்ளது, அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், 9வது இடது, 1வது குறுக்குத் தெரு, மணிக்கடபுரம், சென்னை - 600062, தமிழ்நாடு மற்றும் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :

வடக்கு	: பிளாட் எண். 90–ஏ	**கிழக்கு**	: பிளாட் எண். 91
தெற்கு	: பிளாட் எண். 92–ஏ	**மேற்கு**	: 20 அடி. பொதுவான சாலை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்தின் இணையதளம், அதாவது கொடுக்கப்பட்டுள்ள www.sammaancapital.com என்ற இணைப்பில் பார்க்கவும். தொடர்பு எண் : 0124-6910910, +91 7065451024; மின்னஞ்சல் முகவரி: auctionhelpline@sammaancapital.com. ஏலத்திற்கு, வருகை தரவும் www.auctionfocus.in.

எஸ்டி/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சம்மான் கேபிடல் லிமிடெட்
(முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிட் என்று அழைக்கப்பட்டது)

தேதி : 11.09.2026
இடம்: சென்னை

விற்பனை அறிவிப்பு

பாங்க் ஆப் இந்தியா
Bank of India BOI

கோயமுத்தூர் கடன் வசூல் கிளை, கோயமுத்தூர் மண்டல அலுவலகம்
'ஸ்டார்' ஹவுஸ் எண்.324, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர்–641001.
போன்: 0422-2397221, 2383074, இமெயில்: assetrecovery.coimbatore@bankofindia.bank.in

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தானது பாங்க் ஆப் இந்தியாவின் சம்பந்தப்பட்ட கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வ சுவாதீனம்** செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக '**எங்குள்ளதோ உள்ளபடி**' '**என்ன உள்ளதோ அப்படியே**' மற்றும் '**என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி**' என்கிற நிலையில் **27.10.2026** தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலை, முன் வைப்புத் தொகை மற்றும் சொத்து விவரம் கீழே குறிப்பிட்டபடியாகும்.

கிளை: கோயமுத்தூர் கிளை: (இக்கடன் கணக்காணது தற்போது கோயம்புத்தூர் கடன் வசூல் கிளையில் உள்ளது) கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்: கடன்தாரர்கள் : M/s. சுந்தர் டயர்ஸ் அண்ட் வீல்ஸ் பிரைவேட் லிமிடெட், புதிய எண்.15, பழைய எண்.8, வொய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை சென்னை – 600014, பிரதிநிதியாக அதன் இயக்குநர்கள் : **(1) திரு சுந்தரவேல் K S P, த/பெ K.S.பழனிகுமாரசாமி.** (இயக்குநர் மற்றும் உத்தரவாதமளித்தவர்), புதிய எண். 15, பழைய எண்.8, வொய்ட்ஸ் ரோடு, சென்னை–600014; (2) **திருமதி.ஜனனி சண்முகப்பிரியா, க/பெ சுந்தரவேல்** (இயக்குநர் மற்றும் உத்தரவாதமளித்தவர்), 1A சக்தி நகர், சுந்தர் டயர்ஸ், பைபாஸ் ரோடு, மதுரை 625003; (3) **திரு. சஞ்சய்குமார், த/பெ. சுப்ரமணிய ராஜா** (இயக்குநர் மற்றும் உத்தரவாதமளித்தவர்), எண்.165 A2, மாடசாமி கோவில் வீதி, ராஜபாளையம், விருதநகர் – 626117 மற்றும் **கார்ப்பரேட் உத்தரவாதி மற்றும் அடமானதாரர்** M/s. **தி ஜானகிராம் மில்ஸ் லிட்.,** ஜானகிராம் மில்ஸ் வளாகம், ஸ்ரீவில்லிப்புத்தூர் ரோடு, அஞ்சல் பெட்டி எண்.4, சக்தி நகர், ராஜபாளையம் – 626117. மொத்த நிலுவைத் தொகை: டெர்ம் லோனிற்கு : **10.09.2026** தேதி அன்று **ரூ.8,88,12,461.00** மற்றும் **29.07.2024** தேதியிலிருந்து மாதாந்திர கணக்கீட்டிலான **10.50%** வருட வட்டியுடன் மற்றும் வட்டி, பொருந்தும் செலவுகள், பிற கட்டணங்களுடன்.

அசையா சொத்து விபரம்: இனம் 1: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தாலூக்கா, ராஜபாளையம் சார் பதிவு எல்லைக்குட்பட்ட, ராஜபாளையம் நகராட்சி எல்லைக்குள், ராஜபாளையம் மதுரை ரோட்டில் தற்போதைய டவுன் சர்வே எண்கள் 6 முதல் 51 முடிய டவுன் சர்வே ப்ளாக் எண் 2. டவுன் சர்வே வார்டு Hல் (பழைய வருவாய் சர்வே எண் 438 பகுதி, 432/ A கொத்தங்குளம் வருவாய் கிராமத்தில்) அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் **85 சென்ட்,** அதாவது 77 சென்ட் மற்றும் 8 சென்ட் (முன்னர் கிணறு மற்றும் கமலைக்குழி இருந்த இடம்) சேர்த்து, அதன் பிற அனைத்து அபிவிருத்திகளும் சேர்ந்த சொத்து, அடமானதாரரால் வாங்கப்பட்டது. இது ராஜபாளையம் சார் பதிவகத்தில் பத்திரப்பதிவு எண் 761/1943 ஆகப் பதியப்பட்டது ஆகும். இச்சொத்தின் நான்கு **எல்லைகள்:** கிழக்கு : கிருஷ்னா ஆயில் மில்லுக்குச் சொந்தமான நிலச்சொத்து (ப்ரஸ்ஸிங் தொழிற்சாலை), மேற்கு: M/s.ஜானகிராம் மில்லுக்குச் சொந்தமான சொத்து, தெற்கு: இரண்டாம் இனச் சொத்து (தி ஜானகிராம் மில்ஸ் லிட்) மற்றும் அதன் பின்னர் ரயில்வே தடம், வடக்கு: மதுரை தென்காசி ரோடு, **இனம் 2:** விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தாலூக்கா, ராஜபாளையம் சார் பதிவு எல்லைக்குட்பட்ட, ராஜபாளையம் நகராட்சி எல்லைக்குள், ராஜபாளையம் மதுரை ரோட்டில் தற்போதைய டவுன் சர்வே எண்கள் 6 முதல் 51 முடிய, டவுன் சர்வே ப்ளாக் எண் 2, டவுன் சர்வே வார்டு Hல் (பழைய சர்வே எண் 438 பகுதி, 432/A கொத்தங்குளம் வருவாய் கிராமத்தில்) அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் **59 சென்ட்** விஸ்தீரணத்துடன் அதில் கதவெண்கள் 8/1 முதல் 46/1 முடிய உள்ள வீட்டுக்கட்டடங்கள் சேர்ந்த சொத்து, இச்சொத்து, ராஜபாளையம் சார் பதிவகத்தில் பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண் 1265/1943 ஆகப் பதியப்பட்டு, அடமானதாரரால் வாங்கப்பட்டதாகும். இதன் நான்கு **எல்லைகள்:** கிழக்கு: கிருஷ்ணா ஆயில் மில்லுக்குச் சொந்தமான நிலச் சொத்து (ப்ரஸ்ஸிங் தொழிற்சாலை), மேற்கு: ஜானகிராம் ஆலைக்குச் சொந்தமான சொத்து, தெற்கு: தொடர் வண்டிப்பாதை, வடக்கு: முதல் இனச் சொத்து (தி ஜானகிராம் மில்ஸ் லிட்) அதன் பின்னர் மதுரை தென்காசி ரோடு, இந்தச் சொத்தானது, அதன் இயக்குநர் திரு. சஞ்சய்குமார், த/பெ. சுப்ரமணிய ராஜா அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் **M/s. தி ஜானகிராம் மில்ஸ் லிமிடெட்** நிறுவனத்திற்குச் சொந்தமானது. **இனம்-1 மற்றும் இனம்-2 ன் மொத்தப் பரப்பு : 85 சென்ட் + 59 சென்ட் 144 சென்ட்** இச்சொத்து M/s.தி ஜானகிராம் மில்ஸ் லிட்டிற்குச் சொந்தமானது.

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ.10,86,00,000/- முன்வைப்புத் தொகை: ரூ.1,08,60,000/- ஏல உயர்வு மடங்கு: ரூ.50,000/-

இ-ஏலத் தேதி மற்றும் நேரம்: 27.10.2026 (செவ்வாய்கிழமை) காலை 11மணி முதல் மாலை 5மணி வரை
(ஏலம் தொடங்கும்பட்சத்தில், ஏலம் நிறைவுபெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புக்களுடன்)

அதிகாரம் பெற்ற அலுவலர் அறிந்த மற்றும் கிடைத்த தகவல்களின்படி மேற்குறித்த சொத்தின் மீது வில்லங்கம் எதுவும் இல்லை. இருந்த போதிலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் சொந்த விசாரணையின்பேரில், வில்லங்கங்கள், சொத்தின் உரிமையாளர் குறித்து விசாரித்து, சொத்தினையும் பார்வையிட்டு திருப்தி செய்து கொள்ள வேண்டும். இந்த இ–ஏல விற்பனை/ஏலக்கேட்பு ஆன் லைனில் மின்னணு முறையில் மட்டுமே **https://BAANKNET.com** இணையதளம் மூலமாக நடைபெறும்.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு இ-ஏலத்தோடு தொடர்புடைய பின்வரும் இணையதளத்தின் 'லிங்க்'கினை அணுகவும்.
https://www.bankofindia.bank.in/tenders

இடம் : கோயமுத்தூர்
தேதி : 10.09.2026

முதன்மை மேலாளர் & அதிகாரம் பெற்ற அலுவலர்
பாங்க் ஆப் இந்தியா

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்–641607.
மின்னஞ்சல்: vm.divakaran.govindasamy@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 06/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட் (ஐபிஎல்) (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 25.06.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர் & உப கடன்தாரர் பெயர்: J.V.R.மூர்த்தி சீ ஃபுட்ஸ் (கடன்தாரர்), திரு. J.V.R.மூர்த்தி (உப கடன்தாரர்) மற்றும் திருமதி. V. கல்யாணி (உப கடன்தாரர்)

கடனீட்டுச் சொத்து விவரங்கள்: நரபள்ளி சார் பதிவு அலுவலக விற்பனை பத்திர ஆவண எண்.1336/2012, தேதி 19.03.2012 இன்படி திரு. J. வெங்கட ரமணா மூர்த்தி, த/பெ, S.ஜாய் குமார் அவர்களுக்குச் சொந்தமான சொத்து.
பர்வதபூர் கிராமம் மற்றும் கிராம பஞ்சாயத்து, கட்கேசார் மண்டல், முன்னதாக ரெங்கா ரெட்டி மாவட்டம், தற்போது பர்வதபூர் கிராமம், மெடிபள்ளி மண்டல், பீர்ஸடிகுடா நகராட்சி, மெட்ச்சல்– மல்கஜ்கிரி மாவட்டம், சர்வே எண்.29/A, மனை எண்.6 பகுதியில் அமைந்துள்ள 207 சதுர யார்ட் அல்லது 173.05 சதுர மீட்டர்கள் பரப்பளவில் 2100 ச.அடி பரப்பளவு உள்ள தரைத்தளம், முதல்தளம் ஆகியவை உள்ளடங்கிய அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து.
எல்லைகள்: வடக்கு: மனை எண்.6 பகுதி, தெற்கு: மனை எண்.7, கிழக்கு: 20 அடி அகல சாலை, மேற்கு: மனை எண்.1 பகுதி.

சொத்து உரிமையாளர்: திரு. J. வெங்கட ரமணா மூர்த்தி

13(2) அறிவிப்பு நாள்	**நேரடி சுவாதீனம் நாள்**	**15.09.2026 தேதியின்படி நிலுவைத் தொகை**
22.11.2021	10.07.2024	ரூ.1,36,79,345/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து மட்டும்)

நிர்ணய விலை	**முன்வைப்புத் தொகை– நிர்ணயவிலையில் 10%**	**ஏலம் உயர்த்தும் தொகை**	**சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:**
ரூ.95,00,000/– (ரூபாய் தொன்னூற்று ஐந்து லட்சம் மட்டும்)	ரூ.9,50,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்	ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)	அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கணக்கு விவரங்கள்:	கணக்கு எண்.344905001084, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 06/2021–22 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா(கி), மும்பை, IFSC Code:ICIC0003449

மின்–ஏலம் நாள் & நேரம் 07 அக்டோபர் 2026 (புதன்கிழமை) காலை 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.	**ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்** **05 அக்டோபர் 2026 (திங்கள் கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக**

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 16.09.2026 தேதி முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(V M திவாகரன்)
கைபேசி எண். 9962333307
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 18.09.2026
இடம்: சென்னை